இருக்கிறது. சாலைகள், பாலங்கள், நீர்நிலைகள், கால்வாய்கள், வரத்துக் கால்வாய்கள், போன்றவை எல்லாம் வெகுவாக பாதிக்கப்பட்டு 400 கோடிக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டு அவைகளை எல்லாம் சீரமைக்க வேண்டிய ஒரு மிகப்பெரிய இக்கட்டான சூழ்நிலை அரசுக்கு இருக்கிறது. அந்த வேலைகளையும் நாம் முடித்தாகவேண்டும். அதற்கான நிதியாதாரத்தையும் நாம் தேட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். அதுபோல் புதிய திட்டங்களை, இப்படிப்பட்ட திட்டங்களை எடுப்பதற்கும் பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. ஆக இருக்கின்ற நிதியாதாரத்தைப் பொறுத்துதான் முன்னுரிமை கொடுக்கப்படவேண்டிய திட்டங்களை முதலில் செய்துவிட்டு அதற்குப் பின்னால் இவை . வருகின்ற சூழ்நிலையில்தான் இப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் கொஞ்சம் தடைப்படுகின்றன. இருந்தாலும் அந்தப் பகுதியினுடைய முக்கியத்துவத்தைக் கருதி இதுசம்பந்தமாக அதிகாரிகளிடத்தில் இருந்து விரிவான அறிக்கையைப் பெற்று வெள்ள நிவாரணப் பணிகளின் கீழே ஏதாவது ஒரு பாலத்தையாவது கட்டலாமா என்பதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 130, திரு. எம். கே. பாலன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

130—

கிண்டி தொழிற்பேட்டை குடியிருப்புகளைக் குடியிருப்போருக்கே சொந்தமாக்குதல்

***19855**—திரு. எம். கே. பாலன்:*

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கிண்டி தொழிற்பேட்டைக் குடியிருப்புகளை குடியிருப்போருக்கே சொந்தமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தொழிலாளர் மலிவு விலை வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட, வாடகை வீடுகள் முதலில் ஒதுக்கீடு செய்யப்பட்டு,

உண்மையாக குடியிருப்போருக்கும் மற்றும் ஓய்வுபெற்ற/இறந்து போன தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் விற்பனை செய்ய அரசு நிலையாணை எண் 691 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 10.8.93-ல் திருத்திய ஆணைகள் வெளியிடப்பட்டு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன்.

திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை, கிண்டி தொழிற்பேட்டை குடியிருப்பைச் சொந்தமாக்கும் திட்டம் 10.8.1993-ல் அமல் செய்யப்பட்டது. கிண்டி தொழிற் பேட்டை குடியிருப்பில் அடிப்படை வசதிகள் எதுவும் செய்யாமல் நீண்டகாலமாக பிரச்சினையாக இருந்து, எத்தனையோ அரசு ஆண்டிருந்தாலும் கூட நம்முடைய புரட்சித்தலைவியின் ஆட்சியில்தான் அந்தக் குடியிருப்புகளை அவர்களுக்குச் சொந்தமாக்கவேண்டும் என்ற இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதற்காக அங்கேயுள்ள குடியிருப்புவாசிகள் நன்றி தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். 10.8.1993-ல் நிறைவேற்றப்பட்ட சட்டம் விரைவுபடுத்தப்படுவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட தங்கமனத் தலைவியாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) 10.8.1993 அன்று அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அவற்றை அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு சிட்கோ நிறுவனத்தின் மூலமாக வீடுகளை ஒதுக்குவதற்கு இன்றைக்கு பல்வேறு கட்டங்களிலே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதையும் அதிலே விலை நிர்ணயம் செய்வதில் எழுந்துள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விரைவிலே அவர்கள் குடியிருக்கிற வீடுகளை ஏற்கெனவே குறிப்பிட்டபடி அவர்களுக்கே சொந்தம் ஆக்குவதற்கான வழிவகைகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அரசில் நிச்சயமாக உடனடியாகச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்பேட்டை குடியிருப்புகள் ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், திருச்சி போன்ற பகுதிகளில் அமைந்திருக்கின்றன. ஆகவே ஜி.ஓ. போடுகிறபோது எல்லா குடியிருப்புக்கும் ஒரே மாதிரி நிர்ணயம் செய்து இருக்கிறார்கள், விலையை. ஆக சென்னை அம்பத்தூரை மட்டும் ஏற்றுக்கொண்டு மற்ற திருச்சி, தஞ்சாவூர் போன்ற கிராமப்புற பகுதிகளில் இருக்கிற தொழிற்பேட்டைகளில் உள்ள அவற்றின் விலையை மாற்றியமைக்கவேண்டும் என்று நீண்ட கால கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை குறித்த நடவடிக்கையையும் விரைவுபடுத்தி செய்து கொடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சிட்கோவின்கீழ் உள்ள 17 தொழிற்பேட்டைகளிலே 1,099 தொழிலாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த அரசு ஆணை என்பது கிண்டி, அம்பத்தூருக்கு மட்டுமல்லாமல் தமிழகத்தில் இருக்கிற 17 தொழிற்பேட்டைகளில் இருக்கின்ற அந்தத் தொழிலாளர் குடியிருப்புகளுக்கும் சேர்த்து அரசாணை வெளியிடப்பட்டு இருக்கிறது. எனவே, அவர்களுக்குக் கொடுக்கப்பட இருக்கின்ற வீட்டுமனையினுடைய இடத்தைப் பொறுத்தவரையில் அதன் விலையைப் பற்றித்தான் பிரச்சினைகள் எழுந்துள்ள காரணத்தால் அதுகுறித்து சிட்கோ நிறுவனத்தோடு இன்றைக்கு நாம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். சிட்கோ நிறுவனமும் அந்த இடத்தின் விலை, சிட்கோ தொழிற்பேட்டையில் உள்ள மேம்படுத்தப்பட்ட மனையின் தற்போதைய விலையையே தொழிலாளர் குடியிருப்புகளுக்கும் அமல் செய்ய பரிந்துரை செய்திருக்கிறது. எனவே, இதுகுறித்து இறுதி முடிவு எடுக்கப்பட்டவுடன் விலை நிர்ணயம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 131, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

131—

தமிழ்நாட்டில் செயற்கை வைரம் பட்டை தீட்டும் பயிற்சி அளித்தல்.

***21545**—டாக்டர் அ. ஸ்ரீதரன்:*

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் Gem cutting and polishing பயிற்சியை ஊக்கப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

முற்பகல் 10-50

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஜெம் கட்டிங் பாலிஷிங் பயிற்சி, அதனுடைய புரோகிரசிவ் ரிசல்ட் நம்முடைய தமிழகத்திலே புரோகிரசிவ் ஆக இருக்கிறதா, அல்லது அதில் ஏதாவது ஏற்றத்தாழ்வு இருக்கிறதா? அந்தத் திட்டம் தமிழகத்திலே பெண்களுக்கு அதிகமான வாய்ப்புகளையும், சலுகைகளையும் தருவதாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.